**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.296/2017**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 3 |
| Name | : Thiru.Immanuvel Jawahar |
| Father's Name | : மாணிக்க ராஜ் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.02.2019.

**முதல் விசாரணை -**

நான் கூடுவாஞ்சேரியில் வசித்து வருகிறேன். நான் மளிகை கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 23.07.2016 அன்று சனிக்கிழமை இரவு 09.30 மணியிலிருந்து 10.00 மணிக்குள்ளாக கூடுவாஞ்சேரி மெயின் ரோடில் உள்ள எனது மளிகை கடையை அடைக்கும் நேரம் என்பதால் பொருட்களை எடுத்து அடுக்கிக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஜிஎஸ்டி சாலையில் எனது கடைக்கு எதிரே எனக்கு தெரிந்த நபரான திரு.எட்வின் தாமஸ் என்பவர் சாலையில் நடந்து கொண்டு சென்று கொண்டிருந்த பொழுது அவருக்கு பின்னால் வந்த லாரி அவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது. சத்தம் கேட்டு அருகில் சென்று பார்த்தேன். எட்வின் தாமஸ் சம்பவ இடத்தில் இறந்து கிடந்தார். பின்னர் அவரது வீட்டிற்கு நான் தகவல் தெரிவித்து விட்டு, அன்றைய தினமே விபத்து சம்பந்தமாக கூடுவாஞ்சேரி காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். நீதிமன்றத்தில் என் முன்பாகக் காட்டப்படும் புகார் மனுவில் கையொப்பம் என்னுடையதுதான். மேற்கண்ட புகார் மனுவானது அதசாஆ 3 ஆகும். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். விபத்து ஏற்படுத்திய நபரை என்னால் அடையாளம் காட்ட இயலாது.

**குறுக்கு விசாரணை -**

புகாரை போலிசார் எழுதிக் கொடுத்து நான் கையொப்பம் செய்தேன். சொன்ன தேதி நேரத்தில் விபத்தை நான் நேரடியாகப் பார்க்க வில்லை என்றும், விபத்தில் இறந்த நபர் எனக்குத் தெரிந்த நபர் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் அது சரியல்ல. போலிசார் என்னை விசாரணை செய்ய வில்லை என்று சொன்னால் அது சரியல்ல.

**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.296|2017**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*********

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 4 |
| Name | : Tmt.Paulin Grace Esthar |
| Husband's Name | : சாலமன் ராஜேஷ் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.02.2019.

**முதல் விசாரணை -**

நான் கூடுவாஞ்சேரியில் வசித்து வருகிறேன். நான் மனநலமருத்துவராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 23.07.2016 அன்று எனது தந்தை எட்வின் தாமஸ் கடைக்கு செல்வதற்காக வெளியே சென்றிருந்தார். அவர் ஜிஎஸ்டி சாலையில் செல்லும் பொழுது லாரி மோதி அதன் சக்கரம் ஏறி விபத்துக்குள்ளாகி, இறந்து விட்டார் என்ற தகவலை ஜவகர் என்னிடத்தில் தெரிவித்தார். தகவல் கிடைத்து நான் காவல் நிலையம் சென்றேன். மறுநாள் காலை செங்கல்பட்டு அரசு பொது மருத்துவமனையில் உள்ள சவக்கிடங்கில் எனது தந்தையின் பிரேதத்தை அடையாளம் காட்டி போலிசார் விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை –** சொன்ன தேதி, நேரத்தில் எனக்கும் எனது தாயாருக்கும் எந்த தகவலும் கிடைக்கப் பெற வில்லை என்றால் சரியல்ல. இறந்தவர் எனது தந்தை என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரணை செய்ய வில்லை என்றால் சரியல்ல.

**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**
**CC No.296/2017**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 5 |
| Name | : Thiru.Pazhani vel |
| Father's Name | : சுப்பிரமணியம் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.02.2019.

**முதல் விசாரணை -**

நான் தற்பொழுது கூடுவாஞ்சேரியில் வசித்து வருகிறேன். நான் சேத்பட்டில் உள்ள மீன் வளத்துறை செயலகத்தில் மேற்பார்வையாளராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 23.07.2016 அன்று நான் அலுவலகம் முடித்து இரவு சுமார் 09.30 மணியிலிருந்து 10.00 மணிக்குள்ளாக நான் வீடு திரும்பிக் கொண்டிருந்த பொழுது ஜிஎஸ்டி சாலையில் மளிகை கடை, மற்றும் கோழிக் கடைக்கு எதிரில் விபத்து ஏற்பட்டிருந்தது. நான் அருகில் சென்று பார்த்த பொழுது எனது எதிர் வீட்டில் வசிக்கும் டேவிட் தாமஸ் என்பவர் விபத்தில் சிக்கி இறந்து கிடந்தார். அங்கு போலிசார் வந்து சம்பவ இடத்தில் விபத்து குறித்து விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். சம்பவ இடத்தில் நின்றிருந்த லாரியின் பதிவெண் 3657 என்று மட்டும் நினைவில் உள்ளது. ஓட்டுநரை நான் பார்க்க வில்லை.

**குறுக்கு விசாரணை -** சொன்ன தேதி, நேரத்தில் நான் சம்பவ இடத்திற்கு செல்ல வில்லை என்றும் விபத்து குறித்து தெரியாமல் இறந்தவர் எனக்கு தெரிந்தவர் என்பதால் அவரது குடும்பத்தாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வண்டியின் பதிவெண் போலிசார் சொல்லி சொல்கிறேன் என்றால் சரியல்ல, நானே பார்த்தேன். போலிசார் என்னை விசாரணை செய்ய வில்லை என்றால் சரியல்ல, விசாரணை செய்தார்கள்.

Sd. xxxxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. xxxxxx
Judicial Magistrate No.II
Chengalpattu.